4th November 1966]

வதற்காக அமெரிக்க அரசாங்கத்திலே இருந்துகூட ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஆகவே, அங்கே ஒரு கல்லூரி வைத்தால் அது மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதால் அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது இந்த மாநிலத்தில் மூன்று விவசாயக் கல்லூரிகள் இருக்கின்றன. இரண்டு அரசாங்கத்தின் சார்பில் இயங்குகின்றன. ஒன்று தனியார் ஸ்தாபனத்தின் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. தஞ்சை நெற்களஞ்சியம் என்பதால் அதைப் பாராட்டுகிறோம். நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அந்த ஜில்லாவிலே ஒரு கல்லூரி ஏற்படுத்துவதைப்பற்றி பரிசீலனை செய்யலாம். வந்தாலும் வரலாம் என்றுதான் சொல்கிறேன், வாக்குறுதி சொல்ல முடியாது. உற்பத்தி அதிகமாகச் செய்கின்ற காரணத்தால் தஞ்சையைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. இராம. அரங்கண்ணல் : தஞ்சை மாவட்டத்தில் இப்படி ஒரு விவசாயக் கல்லூரி நிறுவுவதற்கான நிலம், இடம் முதலியவற்றை எல்லாம் மன்னார்குடிக்கு அருகில் தருவதாக ஒரு பார்லிமெண்ட் உறுப்பினர் அமைச்சர் அவர்களிடம் கூறியதாக நான் அறிகிறேன். திருவாரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியை அந்தக் கல்லூரிக்குத் தருவதாக சொல்கிறார்கள். ஆகவே, தஞ்சை ஜில்லாவில் மன்னார்குடியில் ஒன்றும், திருவாரூரில் ஒன்றும் ஆக இரண்டு இடங்களில் ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பார்லிமெண்ட் அங்கத்தினரும், சட்டசபை அங்கத்தினரும் பேசியிருப்பார்கள் போல் இருக்கிறது. என்னிடம் அந்த விவரம் இல்லை.

கிராம மருந்தகங்கள்

*416 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களின் கீழ் நடைபெற்றுவரும் ரூரல் டிஸ்பென்ஸரீ டாக்டர்களின் பணி முறை, ஒன்றிப்பு மன்ற ஆணையாளர்களால் எவ்விதம் மேற்பார்வையிடப்படுகிறது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The Rural Medical Practitioners are under the administrative control of the Commissioners of Panchayat Unions. They are also subject to the technical control of the concerned District Medical Officer and the Director of Medical Services in so far as the professional side of the work is concerned.

[4th November 1966

திரு. எஸ். முருகையன் : ஊராட்சி மன்றங்கள் ஏற்று நடத்தக் கூடிய மருந்தகங்கள், அதாவது பேராட்சி (மேஜர் பஞ்சாயத்து) மன்றங்களில் உள்ள மருந்தகங்கள் சரியாக, நல்ல முறையில் நடத்தப்படவில்லை என்பதால் சர்க்காரே உடனடியாக எடுத்து நடத்துவதற்கு முன்வருமா? பஞ்சாயத்து யூனியன்களில் பண வசதி இல்லாத காரணத்தாலே நல்ல முறையிலே நடத்த முடிய வில்லை. ஆகவே, அவற்றையெல்லாம் உடனடியாக அரசாங்கமே எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியன் கள் நடத்துகின்றவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்வதாக உத்தேசமில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : அங்கங்கே ரூரல் டிஸ்பென்சரிகள் இருக்கின்றனவே அவற்றை பிரைமரி ஹெல்த் சென்டர்களாக மாற்றுவதற்கு உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

*417 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழகத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள ரூரல் டிஸ்பென்சரிகள், கிராமங்களில் உள்ள மருத்துவ மனைகள் ஆகியவைகளைச் சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் உத்தேச முண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை. தற்போது அத்தகைய செயற் குறிப்பு எதுவும் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படுகின்ற டிஸ்பென்சரிகள் சரியாகச் செயல்படவில்லை. மருந்துகள் போதுமான அளவு கிடைப்பதில்லை. ஆகவே, சர்க்காரே அவற்றையெல்லாம் எடுத்துக் கொள்வதற்கு என்ன ஆட்சேபம் இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரிகள் அவர்களுடைய பொறுப்பிலேயே உள்ளவை. மருந்து தேவைப்படுகின்ற அளவை மாற்ற வேண்டுமென்றுதான் முன்பு 2,500 ரூபாய் கொடுத்து வந்ததை இப்பொழுது 5,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். அவர்கள் மருந்து பூராவும் தீர்ந்து போவதற்கு முன்பாகவே சரிவர இன்டென்ட் போட்டு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பினால் மருந்துகள் கிடைக்கும். அப்படி அனுப்பக்கூடிய மருந்துகளுக்கான பணத்தையும் உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் இந்த மாதிரிக் குறைகள் எல்லாம் இருக்காது.